## (ஐ) கைத்தொழில் உற்பத்திப் போக்குகள்

1962ம் ஆண்டில் இலங்கை தொழிலுற்பத்தியின் வளர்ச்சியானது புரியும் வேகத்தைக் கண்டிருப்பினும், ஒரு பொதுவான விதத்தில் இவ்வளர்ச்சியினது வேகம் உள்நாட்டு உற்பத்தித்தொகையிலும், மொத்த வேலை நிலையிலும் ஏற்படுத்திய நடைமுறைப்பயனை, மதிப்பிடுவதற்கும், திட்டவட்டமாக அளவிட்டுக் கூறுவதற்கும் ஏற்ற பருவத்தை அவ்வளர்ச்சி அடையவில்லை என்றே கூறல்வேண்டும். முதலீடு செய்யப்பட்ட மொத்த தொழில் மூலதனத்தின் ஒரு பெரும் பகுதி இன்னும் வர்த்தக உற்பத்திப் பருவத்தை அடையவில்லை என்பது மட்டுமின்றி இப்பொருளியற் துறையில் பெறக்கூடிய புள்ளி விபரங்களினது நோக்கு, அவற்றின் நம்பிக்கைத்தன்மை சம்பந்தப்பட்டமட்டில் இயங்கும் வரம்புத்தடைகள் ஒரு இணைந்த முழுமையான தன்மைத்தான முறையில், இக்காலப்பகுதியில் ஏற்பட்ட தொழிற் போக்குகளைச் சித்தரிப்பதற்கு தடையாக அமைகின்றன. அரசாங்க தொழிற் கூட்டுத்தாபனங்களைப் பொறுத்தமட்டில் அண்மைக் காலத்திற்குரிய புள்ளி விபரங்கள் கிடைக்கப்பெறினும், பெறக்கூடும் தரவுகளையும் அவற்றின் மொத்தத் தொகைகளையும் ஒப்பியல்பான விதத்தில் நோக்குவது ஒரு பிரச்சனையாக அமைகின்றது. இதன் முக்கிய காரணமென்னவெனில் இக்கூட்டுத்தாபனங்களின் நிதிமுறைக் கணக்குகள் ஓரினத்தன்மையல்லாதனவான, வேறுபட்ட முறைகளில் அமைக்கப்பெற்றமையே. மறுபுறத்தில் தனியார் துறையில் பெருமளவில் ஏற்பட்ட சிறு தொழில் முயற்சிகளின் தோற்றம் தரவுகளைச் சேகரிப்பதை கடினமாக்குகின்றது. சிறு தொழிற்கள் பொதுவாக புள்ளி விபரச் சேர்க்கைக்கு ஏற்ற முறையில் அமையாதது இதற்கொரு காரணமெனக் கொள்ளலாம். எனவே தற்காலத் தொழிற் போக்குகள் பற்றிப் பின் தொடரும் பகுதிகளில் தரப்படும் விபரங்கள் அனைத்தும் தனியார் துறையிலும் பொதுத் துறையிலும் ஏற்பட்ட வளர்ச்சியில், கூடியதாக சில வெளிப்படையான அம்சங்களையே விளக்கிக்கூறுவதாக அமைவதென்பது உணரற்பாலது.

### அரசாங்கத்துறை

அரசாங்கத் தொழிற்திட்டங்களிலே அவற்றின் இயக்கத்தைச் சீர் திருத்தும் நோக்கத்துடன் எடுக்கப்பட்ட நிர்வாகம், தொழில்நுட்ப சம்பந்தமான நடவடிக்கைகள் கடந்த வருடத்திலும் தொடர்ந்து கையாளப்பட்டன. ஒரு வளர்ச்சித்திட்டத்தின் சூழ்நிலைமைக்கமைய அவை உருவாக்கப்பட்டதெனினும், முந்திய காலத்திலும்பார்க்க நடைமுறைக்கொத்த மூலதன, உற்பத்தி இலக்குகள் இவ்வாண்டு விதிக்கப்பட்டன. ஏற்கனவே இயங்கும் கூட்டுத்தாபனங்கள் பல, தமது முயற்சிகளை உணரப்பட்ட முறையில் தொழிற்களுக்கிடையே நெருங்கிய ஒத்தியங்கலை ஏற்படுத்துவதிலும் தமது பொறி இயந்திரங்களையும் உபகரணங்களையும் இயன்றளவில் முற்றாக உபயோகப்படுத்துவதிலும் கவனஞ் செலுத்தின. சில சந்தர்ப்பங்களில் மேற்கூறிய முயற்சிகள் மூலதனத்தை தொடர்பான உற்பத்தித்துறைகளிலே விரிவாக்கம் பெற வைத்தன. பொறித் தொகுதி, இயந்திர உபயோகத்தை வியாபிக்கும் கொள்கை மூலமாக சராசரி உற்பத்திச் செலவுகளை மேலும் குறைப்பதற்கும், உதாரணமாக பொருட்களைக் கையாளுதல், போக்குவரத்து சேவை போன்றவற்றில் மூலதனத்தை மேற்கூறிய கொள்கையோடு ஒரே தருணத்தில் மேற்கொள்ளுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. தேரப்பட்ட அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் சிலவற்றின் இயக்கப் போக்கைச் சுட்டிக் காட்டும் வகையில் சில சுருக்கக்குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

**கைத்தொழில் நிலையக் கூட்டுத்தாபனம்**

ஏகலையில் (ஜாஎலை மாவட்டத்தில்) அமைக்கப்பெற்றிருக்கும், இலங்கையின் முதற் தொழில் நிலையமானது 4 வட்டாரங்களாக பிரிக்கப்பட்டுள்ள 70 ஏக்கர் நிலப்பரப்பின் மீது அமைந்துள்ளது. 20 சிறுதிட்ட, இடைத்திட்டளவில் அமையும் தொழில் அலகுகளைக் கொள்ளக்கூடியதான 25 ஏக்கர் பரப்பினைக் கொண்ட ஒரு தொழில் நிலைய வளர்ப்பகத்தைக் கொண்டதாக விளங்கும் இத்திட்டத்தின் முதலாம் கட்டம் 50 இலட்சம் ரூபாய் செலவில் செயலாக்கப்பட்டுள்ளது. இவ்வொவ்வொரு தொழிலலகும் ஒரு தொழிற்சாலைக் கட்டடத்தையும், அதனோடு காரியாலயத்திற்கு வேண்டிய இடம், சுற்றி அடைக்கப்பட்ட வாகனங்கள் நிற்பாட்டும் இடவசதியையும், பெருந்தெருவிலிருந்து தொழிற்சாலைப் பிரவேசப்பாதை வசதிகளையும், பெற்றதாய் அமைகின்றது. இத்தொழில் நிலையத்தின் மிகுதிப்பாகமானது 31 ஏக்கர் கொண்ட இரு பெரும் தொழிற்பரப்புகளைக் கொண்டதாயும் ஒரு சேவைகளமையும் பரப்பான 14 ஏக்கர் கொண்ட பரப்பையும் கொண்டிருக்கும் விதமாகவும் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்விரு தொழிற்பரப்புகளில் ஒன்று பெருந் தொழில்களுக்கெனவும், மற்றயது இணையாத் தொழிற்களான-சத்தம் நாற்றம் அன்றி தூசு காரணமாகப் பிரித்தமைக்கப்படவேண்டிய தோற் பொருளுற்பத்தி, சிமேந்து வேலை, குடைந்த கட்டுக்கல் உற்பத்தி போலானவற்றிற்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்தொழில் கூட்டுத்தாபனத்தின் கொள்கையாக வசதிப்பட்ட அளவில் இணைப்புத்தன்மையையும், ஒன்றிற்கொன்று தங்கியிருப்புத்தன்மையையும் நிறுவும் விதத்தில், பலதரப்பட்டதொன்றான ஒரு தொழில் அமைப்பை உருவாக்குவது விளங்குகின்றது. மேற்கூறிய இரு தன்மைகளினால் பொருளியற் சிக்கனங்கள் தோன்றுவதும், அவை இவ்விதப்பட்ட தொழில் இட அமைப்பின் ஒரு முக்கிய நல்விளைவு என்பதும் தெளிவு. தொழிலமைச்சின் ''அங்கீகாரம் பெற்ற தொழில்கள்'' பட்டியலில் இடம்பெறும் முயற்சிகளே இத்தொழில் நிலையத்தில் இடம்பெறும் தராதரத்தைப் பெற்றிருக்கின்றன. கொடுக்கப்படும் வாடகைகள் கூட்டுத்தாபனத்தின் செலவுகளை மீட்டுக்கொள்ளும் விதத்தில் மட்டுமே விதிக்கப்படுவன. இத்தொழில் நிலைய கூட்டுத்தாபன வேலை முற்றுப் பெற்றவுடன், வங்கி, தபாற்கந்தோர், தானியங்கித் தொலைபேசி வசதிகள், தொழிலாளர் வீடமைப்பு முதலியனவற்றைக் கொண்டு விளங்கும் ஒரு நவீன தொழிற் சமுதாயத்தின் கருவூலமாக அது அமையும்.

இத்தொழில் நிலையத்தின் வளர்ப்பகத்தில் (Nursery Section) உள்ள தொழில்களில் பதினெட்டு, பலவிதப்பட்ட பொருட்களின் உற்பத்திக்கோ அன்றி அவற்றின் உருவாக்கத்திற்கோவென ஒதுக்கப்பட்டுள்ளன. இவ்விதப்பட்ட முயற்சிகளில் ஏழு சமீபத்தில் உற்பத்தியை ஆரம்பித்துள்ளன. (முதலாவது உற்பத்தி ஐப்பசி 1962ல் தொடங்கியது). மேலும் ஐந்து தொழில்கள் தமக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் ஏற்கனவே நகர்ந்துள்ளன. வர்த்தக உற்பத்தியை ஏற்கனவே மேற்கொண்டிருக்கும் தொழில்கள், பழரசம், ஜெலிகள், ஊறுகாய், வானொலி உபகரணங்கள், சூட்கேசுகள், பிரயாணப் பொருட்கள், கரித்தாள், பிளாஸ்டிக்பொருட்கள், விளக்குமூடிகள், பிரஷ்கள், தேயிலைப் பெட்டி உபகரணங்கள் போன்றன. மேலே தரப்பட்ட தொழில்களில் இணைப்புத்தன்மையென்பது காணப்படாதது பெரும்பாலும், கூட்டுத்தாபனம் தொழில்களைத் தேர்ந்தெடுக்கும் முயற்சியில் முன்னர் கொண்ட உரைகற்களைத் தளர்த்தியமையின் விளைவே எனக் கூறலாம். ஏற்கனவே இயங்கிவரும் ஏழு முயற்சிகளில் அமைக்கப்பட்டிருக்கும் இயந்திரம் மற்றும் பல தளவாடங்களினது மொத்த மதிப்பீடு கிட்டத்தட்ட ரூ. 700,000 ஆகவும், அவை 245 தொழிலாளர்களுக்கு வேலையளிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனோடு ஒப்பிடும் பொழுது தொழில் நிலையத்தில் இடம்பெறத் தேர்ந்தெடுக்கப்பட்ட 18 தொழில் முயற்சிகளுக்குரிய மதிப்பீடு 30 லட்சம் ஆகும். இவ்வேழு முயற்சிகள் 245 தொழிலாளர்களுக்கு வேலை வழங்குமெனவும் மொத்தமாக 18 முயற்சிகளும் 662 ஆட்களுக்கு வேலை வழங்குமெனவும் கணக்கிடப்பட்டுள்ளது. (இக்கணக்கு தொழில் நிலையத்தில் இட வசதியைப்பெற கூட்டுத்தாபனத்திற்கு விண்ணப்பிக்கும் போது இத்தொழில் முயற்சிகள் கொடுத்த தரவுகளின் அடிப்படையில் செய்யப்பட்டதாம்).

### தோற்பொருட்கள் கூட்டுத்தாபனம்

இத்தாபனத்தின் ஆரம்பகாலத்திலிருந்து தோற்பதம்படுத்தும் பகுதியினதும், சப்பாத்து தொழிற்சாலையினதும் உற்பத்தி பெருமளவில் அதிகரித்துள்ளது. இவ்வதிகரிப்பின் வீதமானது குறிப்பாக 1962ம் ஆண்டில் உயர்ந்துள்ளது. 1961ம் ஆண்டின் குரோம் தோல் உற்பத்தியானது 400 ஆயிரம் சதுர அடியிலும் குறைவாக இருந்து இவ்வருடத்தின்போது 511 ஆயிரம் சதுர அடியாக உயர்ந்துள்ளது. முந்தைய வருடத்தின் பாதரட்சைகளின் உற்பத்தியோடு ஒப்பிடும் போது 1962ம் ஆண்டினது உற்பத்தி இருமடங்காகப் பெருகியுள்ளது. 1962ல் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களது தொகை 345 ஆக இருந்தது. இது 1961ன் தொகையிலிருந்து 16 சத வீதத்தால் உயர்ந்துள்ளது. இம்மேற்கூறிய உற்பத்தி உயர்வு மாற்றங்கள், ஒரு புதுப்பாதரட்சைத் தொழிற்சாலை நிறுவுவதைக் கொண்ட பாதரட்சை உற்பத்திப் பெருக்கத்திட்டத்தினை கூட்டுத்தாபனம் மேற்கொண்டதன் விளைவுகள் எனக் கூறலாம். 1962ல் இத்தாபனத்தின் மொத்த முதலானது அரசாங்கத்திடமிருந்து கடனாகப் பெறப்பட்ட தொகையான 35 இலட்சத்தால் அதிகரித்தது. இத்தொகையின் பெரும் பங்கு புதுப் பாதரட்சைத் தொழிற்சாலையில் மூலதனம் செய்யப்பட, இவ்வுற்பத்திப் பெருக்கத்திட்டத்தின் முழு விளைவும் தாக்கமும் 1963ம் ஆண்டிலேயே உணரப்படும்.

### தோற் பொருட்கள் கூட்டுத்தாபனம் (அ)

| வருடம் | அங்கீகரிக்கப்பட்ட முதல் (10 லட்சம் ரூபாய்களில்) | நிலையான முதல் (10 லட்சம் ரூபாய்களில்) | | | உற்பத்தி (இ) | | | ஊழியம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | இயந்திரமும் உபகரணங்களும் | நிலமும் கட்டடங்களும் | மொத்தம் ஏனைய உட்பட | தோற்பதப் பொருட்கள்: குரோம் (1000 ச. அடி) | தோற்பதப் பொருட்கள்: ஏனைய (ஈ) (1000 இரு) | (உ) பாதரட்சை (1000 சோடிகள்) | |
| 1956(ஆ) .. | 1·7 | 0·45 | 0·38 | 0·83 | 74·9 | 156·1 | 11·8 | 221 |
| 1957 .. | 1·7 | 0·32 | 0·51 | 0·83 | 128·1 | 231·0 | 30·4 | 251 |
| 1958 .. | 1·7 | 0·39 | 0·50 | 0·89 | 193·6 | 224·3 | 42·1 | 288 |
| 1959 .. | 1·7 | 0·39 | 0·50 | 0·87 | 306·3 | 223·8 | 51·8 | 295 |
| 1960 .. | 1·7 | 0·38 | 0·47 | 0·97 | 335·1 | 203·8 | 55·6 | 298 |
| 1961 .. | 1·7 | 0·40 | 0·47 | 1·57 | 396·7 | 206·7 | 52·2 | 300 |
| 1962 .. | 5·2 | 2·00 | 2·23 | 5·20 | 511·0 | 199·0 | 101·0 | 345 |

(அ) நிதித்தரவுகள் யாவும் சித்திரை பங்குனி கணக்கு வருடங்களுக்குரியன. ஊழியத்தரவுகள் தை-மார்கழி, கலண்டர் வருடத்திற்குரியன.
(ஆ) 9 மாதங்கள் சித்திரை-மார்கழி.
(இ) தோற்பொருட்கள் கிளையினது உற்பத்திகளைத் தவிர்த்து.
(ஈ) பசுமாட்டுத்தோல், ஆட்டுத்தோல், எருதுத்தோல் முதலியன.
(உ) ''பூட்ஸ்களும்,'' சப்பாத்துக்களும் சிறுவர் சப்பாத்து உட்பட.

இக்கூட்டுத்தாபனம் 1956ம் ஆண்டு தொடக்கமாக இலாபம் ஈட்டி வந்திருப்பினும், இவ்விலாபங்களின் நிலையில் தளம்பல்கள், பல, காலத்திற்கு காலம் ஏற்பட்ட கூலி வீத உயர்வு, மூலப்பொருட்களின் விலை உயர்வுகள் போன்ற காரணிகளால் ஏற்பட்டிருக்கின்றன. தற்போது ஊழிய, மூலப்பொருட் செலவுகள், (தாபனத்தின் பொருட்களின் விற்பனை விலைகளில் ஒப்பியல்பான மாற்றமேற்படாமலிருந்தவிடத்து) ஒரு அளவில், உற்பத்தி விற்பனைப் பெருக்கத்தால் ஏற்பட்ட விளைவுகளை நிராகரிக்கும் முறையில், அமைந்துள்ளன. தாபனத்தின் தற்போதைய விளைவுப் பெருக்கத்திட்டமானது உள்நாட்டுத் தேவைகளை பூர்த்திசெய்யும் நோக்கத்துடன் மட்டுமல்லாமல் ஏற்றுமதிச் சந்தைக்கு நிரம்பல் செய்யும் வண்ணமும் அமைந்துள்ளது. நிறுவப்படும் புதிய பொறி இயந்திர தளபாடங்கள் முழுதாக நிறுவப்பட்டவுடன் அவற்றின் மூலம் 10 லட்சம் சோடிப் பாதரட்சைகளை உற்பத்தி செய்யக்கூடியதாக அல்லது 1962ம் ஆண்டின் மொத்த உற்பத்தியின் 10 மடங்கான உற்பத்தியைப் பெறக்கூடியதாக இருக்கும்.

### கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனம்

1962ல் செய்யப்பட்ட இல்மனைட் உற்பத்தி குறைவான அளவில் அமைந்து மொத்த உற்பத்தி 11,500 தொன்களாக இருந்தது. இவ்வுற்பத்தியில் ஒரு சிறு பாகமே முக்கியமாக வர்த்தக மாதிரிகளாக ஏற்றுமதி செய்யப்பட்டது. இவ்வுற்பத்திக் குறைவு ஒரு அளவில், கட்டடமைப்பு வேலைகளில் தாபனம் கவனஞ் செலுத்தவேண்டியிருந்தமையாலும், இதுவரை இல்மனைற்றுக்கு ஏற்றுமதி வெளிமுகங்கள் போதியளவிற் கிடைக்கப்பெறாமையினாலுமே ஏற்பட்டது. இவ்வாண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட இல்மனைட்டில் ஒரு சிறு பகுதி ஜப்பானுக்கு அனுப்பப்பட்டது. பெருமளவு ஏற்றுமதிக்கான பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருக்கின்றன. தகுந்த ஏற்றுமதி வெளிமுகங்கள் கிடைப்பின், தாபனம் தான் ஏற்கனவே பெற்றிருக்கும் பொறி இயந்திரங்களைக் கொண்டு தற்போது நடைமுறையிலிருக்கும் ஒரு வேளை உற்பத்திக்கு பதில் மூவேளை உற்பத்திச் சுழல் ஒன்றை உட்புகுத்தித் தனது உற்பத்தியைப் பெருக்கிக்கொள்ள முடியும்.

1962ல் நிலையான முதலில் ஏற்பட்ட அதிகரிப்பான ரூ. 10 லட்சம், கடற்போக்கு வசதி வேண்டியமையாலும், ஒரு துறை அமைத்ததாலும், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு ஒரு ''ஜெற்றி'' யை அமைத்ததாலுமே பெருமளவில் ஏற்பட்டது.

**கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனம்**

| வருடம் (அ) | அங்கீகரிக்கப்பட்ட முதல் (10 லட்சம் ரூபாய்களில்) | நிலையான முதல் (பத்து இலட்சம் ரூபாய்களில்) | | | ஊழியம் | ''இல்மனைற்று'' உற்பத்தி (தொன்கள்) | இலாபங்கள் (10 லட்சம் ரூபாய்களில்) |
|---|---|---|---|---|---|---|---|
| | | இயந்திரமும், உபகரணங்களும் | நிலமும் கட்டடமும் | மொத்தம் ஏனைய உட்பட | | | |
| 1959 .. .. .. | 8·0 | 1·1(ஆ) | 0·3 | 1·4 | வி.கி. | — | வி.கி. |
| 1960 .. .. .. | 8·0 | 1·6 | 2·1 | 3·7 | 90 | — | வி.கி. |
| 1961 .. .. .. | 8·0 | 2·0 | 2·0 | 6·1 | 100 | — | வி.கி. |
| 1962 .. .. .. | 8·0 | 2·0 | 2·0 | 7·3 | 100 | 11,500 | வி.கி. |

(அ) நிதிவருடம், சித்திரை-பங்குனி.

(ஆ) இயந்திர நிரம்பலுக்கும், நிறுவனத்திற்கும், இவை செய்யப்படுமுன்னரே அளிக்கப்பட்ட கொடுப்பனவுகளை உள்ளடக்குவது.

### தேசிய சிறு தொழில் கூட்டுத்தாபனம்

11 தச்சுவேலைச்சாலைகள், ஒரு இயந்திரப்படகு அமைப்பு நிலையம், 5 ஓட்டுத்தொழிற்சாலைகள், ஒரு ஆயுள்வேத மருந்துத் தயாரிப்புத் தொழிற் சாலைபோன்ற பல சிறு தொழில் முயற்சிகளைக் கொண்ட ஒரு தொடரை இத்தேசிய சிறு தொழில் கூட்டுத்தாபனம் திட்டமிட்டுள்ளது. இத்தச்சு வேலைச்சாலைகளின் அங்கீகரிக்கப்பட்ட ஆரம்பமுதல் ரூ. 10 லட்சமாகும். (இச்சாலைகள் 1954-58 காலப்பகுதியில் இயங்கிய கூட்டுத்தச்சு சங்கங்களி னிடத்தில் இயங்குகின்றனவாம்). இம் முதல் முற்றுக உபயோகிக்கப்பட்டு, மேலும் ரூ. 850,000 கொண்ட ஒரு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தச்சு சாலைகள் முக்கியமாக அரசாங்க திணைக்களங்களுக்கு வேண்டிய தளபாடங்களை உற்பத்தி செய்கின்றன. அவை 1000 கூலியாட்களையும் 200 எழுதுவினைஞர், நிர்வாக ஊழியர்களையும் கொண்டு இயங்குகின்றன.

கூட்டுத்தாபனத்தின் தச்சுப்பகுதி தொடர்ந்து வருடாவருடம் நட்ட மடைந்துள்ளது. அதன் ஆரம்பகாலத்திலிருந்து இந்நட்டம் வருடத்திற்கு கிட்டத்தட்ட சராசரி ரூ. 8000 ஆக விளங்கிற்று. இதற்குரிய காரணிகளாவன—போதியளவில் தரமான மரம் கிடையாமை, அரசாங்கக் கட்டுப்பாடு களினுல் கூட்டுத்தாபனங்களின் உற்பத்திப் பொருட்களின் மேலமைந்த விலைக்கட்டுப்பாடு, நாட்டினது தச்சுத்தொழிலின் உற்பத்தி மிகுநிலை யினுல் தனியார்களிடமிருந்து கேள்வி எழாதமை போன்றவை. இத்தொழி லுற்பத்தியின் மிகுநிலை, பெருமளவு சிறு வேலைச்சாலைகளைக் கொண்ட தனி யார் துறையிலும் திட்டமிடப்பட்ட பொதுத்துறையிலும் ஏற்பட்ட தொழில் உற்பத்தி மிகுநிலை காரணமாகத் தனியாட்களிடமிருந்து கேள்வி எழுவது கடினமானதால் ஏற்பட்டதாம். திட்டமிட்ட அரசாங்கத் துறை யிலே, 2000 கூட்டுறவு தச்சுச்சங்கங்களும் அண்மையில் கல்ஓயா அபிவிருத்தி சபையினுல் நிர்மாணிக்கப்பட்ட உயரிய இயந்திர வசதிகள் பெற்ற ஒரு தச்சுத்தொழிற்சாலையும் உள்ளன.

எனினும் கூட்டுத்தாபனத்தின் மரத்தளபாடப் பொருட்களின் போட் டித் தன்மையைக்கூட்டும் முயற்சி ஒன்று, உற்பத்தித்திறனை உயர்த்தும் வண்ணம் ஒரு ஊழிய ஊக்கத்திட்டம் வழியாக எடுக்கப்பட்டுள்ளது. தனிப் பட்ட கொந்தராத்துக்காரர் மேல் தங்கியிருக்கவேண்டிய நிர்பந்தத்தை தவிர்க்கும் முகமாக கூட்டுத்தாபனம் தனது சொந்த அரிவு ஆலையை நிர் மாணிக்கின்றது. (இவ் அரிவு ஆலைக்கு நிதியீட்டுவது செய்ய மட்டுமின்றி, எண்ணியிருக்கும் மூலதனமாகிய ரூ. 850,000) சில உற்பத்தி முறைகளில் உற்பத்திச் செலவுகளைக் குறைக்கும் நோக்குடன் இயந்திரங்களைப் புகுத்துவ தற்கும் பயன்படுத்தப்படும்.

இக்கூட்டுத்தாபனம் நிறுவத்திட்டமிட்டிருக்கும் ஐந்து ஓட்டுத் தொழிற் சாலைகளினது மொத்த உற்பத்தி ஆற்றல் வருடம் 30 லட்சம் ஓடுகளாக இருக்கும். இவற்றில் முதலாவது தொழிற்சாலை 1963 சித்திரையில் உற்பத்தி ஆரம்பிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

தனது படகுகட்டு வேலையிலே இக்கூட்டுத்தாபனம் இலாபத்தைச் சம்பாதித்து வருகின்றது.

### கிழக்குப்பகுதி காகித கூட்டுத்தாபனம்

இக்கூட்டுத்தாபனத்தின் காகித உற்பத்தி 1959இல் இருந்து ஒரே நிலையிலேயே இருந்து வருகின்றது. 1962ல் அது 4.7 ஆயிரம் தொன்களாக இருந்தது. இது மதிப்பிடப்பட்ட உள்நாட்டுச் சந்தையின் 42 சதவீதத்திற்குச் சமனுகும். இக்கூட்டுத்தாபனத்தில் வருடாவருடம் இயக்க நட்டங்கள் தொடர்ந்து வந்திருக்கின்றன. 1959இலிருந்து அவை வருடம் ரூ. 15

லட்சமளவில் நின்றன. 1958ம் ஆண்டு முடிவில் ஒரு தொழில் முறை நிர்வாகச் சீர்திருத்தம் ஆரம்பிக்கப்பட்டு 1962ல் தாபனத்தின் நிலையான முதல் அதிகரிக்கப்பட்டது. அடையப்பட்ட நட்டங்களுக்குரிய காரணங்களாக, அரசாங்கக் கொள்வனவுகளுக்கு கொடுக்கப்பட்ட ஒப்பியல்பான குறைந்த விலைகளையும், கடந்த கணக்கு வருடத்தில் ரூ. 70 லட்சம் அல்லது ஒரு வருட உற்பத்திக்குச் சமனான காகிதம் விற்பனையாகாமல் இருந்ததையும் சுட்டிக் காட்டலாம். காகித உற்பத்திச் செலவு உண்மையில் 1959இல் இருந்த (கொழும்புக்களத்திலிருந்து) தொன்னுக்கு ரூ. 2039லிருந்து 1962ல் தொன்னுக்கு ரூ. 1600 ஆக இறங்கியுள்ளது. 1961-62ல் அரசாங்கத்தின் கொள்வனவுகளை அக்காலச் சந்தை விலைகளில் மதிப்பிடினும், அத்துடன் உற்பத்தி செய்யப்பட்டு கைவசமிருந்த காகிதத்தின் பெறுமானத்தையும் எடுத்துக் கொண்டால் 1962 முடிவில் 13.2 லட்சமாக இருந்த இக்கூட்டுத்தாபனத்தின் நட்டம் உண்மையில் பதிவிற்கு ரூ. 277,000 லாபமாக மாறியிருக்கமுடியும்.

கடந்த வருடத்தில் கூட்டுத்தாபனத்தால் கூடுதலாக செய்யப்பட்ட முதலீடானது அதன் தொழில்முறை இயக்கத்திறனை திருத்துவது மட்டுமின்றி தயாரிக்கப்படும் காகிதப் பொருட்களின் எண்ணிக்கையையும் பெருக்குவதாக இருக்கும். இதுவரை வைக்கோலைச் சேகரிப்பதிலும் சாலைக்கு கொண்டு செல்வதிலும் ஏற்பட்ட கஷ்டங்களின் நிமித்தம், வைக்கோலைத் தூக்குவதற்கும் வயல்களிலிருந்து தொழிற்சாலைக்கு கொண்டு செல்வதற்குமென இயந்திரத் தூக்கிகளை கூட்டுத்தாபனம் புகுத்தியிருக்கின்றது. இவ் வைக்கோல் “இலுக்” புல்லுடன் சேர்ந்து கூட்டுத்தாபனத்திற்கு வேண்டிய மூலப்பொருட்களின் பெரும்பாகமாக அமைகின்றது. இப்படியாக போக்குவரத்து, கையாளல் போன்ற பிரச்சனைகளைத் தீர்த்ததன் காரணத்தினால், காகித ஆலைக்கு வேண்டிய வைக்கோலின் நிரம்பல், தடைபடா வண்ணம் நிச்சயப்படுத்தப்பட்டிருக்கின்றது. நாட்டுக்கு தற்போது வேண்டிய எழுது புத்தகங்கள் யாவற்றையுமே தயாரிப்பதற்கு வேண்டிய இயந்திரமும் நிறுவப்பட்டுள்ளது. ஆயினும், தனிப்பட்ட உற்பத்தியாளரது எழுது புத்தக சந்தை நிலைமையை பாதிக்கக்கூடாதென்ற எண்ணத்துடன் கூட்டுத்தாபனம் தான் தயாரிக்கும் எழுது புத்தகங்களின் தொகையைக் கட்டுப்படுத்தியிருக்கின்றது. அதுமட்டுமின்றி இத்தனிப்பட்ட உற்பத்தியாளர், எழுது புத்தகத் தயாரிப்பிற்கு வேண்டிய காகிதத்தாள்களை கூட்டுத்தாபனத்திடம் பெற்றுக் கொள்ளின் ஒரு விசேட சலுகை விலைக்குரியவராகின்றார். கூட்டுத்தாபனம் தான் தயாரிக்கும் எழுது புத்தகங்களிற்கு ஏற்றுமதிச் சந்தைகளைப் பெற முயற்சிகள் எடுக்கின்றது. ஏற்கெனவே இது பற்றிய விசாரணைகள் பர்மாவிலும் ஆபிரிக்காவிலும் செய்யப்பட்டுள்ளன. சிமெந்து அடைப்பதற்கென தயாரிக்கப்பட்ட ஒட்டப்பட்ட காகித உறைகள் அநேகம் உடைந்து போகின்றதால் தோன்றிய பிரச்சனையைத் தவிர்க்க இவ்வுறைகளை தைக்கும் இயந்திரம் ஒன்று நிறுவப்பட்டிருக்கின்றது. மேலும் இச்சிமெந்து உறைகளின் விற்பனையை பெருக்குவதுமட்டுமின்றி கோழி உணவு, புண்ணாக்கு போன்றவற்றை அடைப்பதற்கும் கொண்டு செல்வதற்கும் வேண்டிய உறைகளை நிரம்பல் செய்வதற்கும், கூட்டுத்தாபனத்திற்கு போதிய வசதிகள் உள்ளன. ஈற்றில், கடந்த வருடத்தில் விளைந்துள்ள சீர்திருத்தங்களில் ஒன்றாக, கூடிய திறன் அமைந்த ஒரு ''பல்ப்பிங்'' முறை அமைகின்றது. ஏற்கெனவே இயங்கும் ''பல்ப்'' காகித ஆலைகளுடன் மற்றுமொரு மட்டைத் தாள் கார்ட்போர்ட் ஆலையொன்று நிறுவுவதும் ஆலோசனைக்கெடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

### கிழக்குப்பகுதிக் காகிதக் கூட்டுத்தாபனம் (அ)

| வருடம் | அங்கீகரிக் கப்பட்ட முதல் (10 இலட் சம் ரூபாய் களில்) | நிலையான முதல் (10 இலட்சம் ரூபாய்களில்) | | | காகித உற்பத்தி (1000 தொன் களில்) | ஊழியம் |
|---|---|---|---|---|---|---|
| | | இயந்திர மும் உபகர ணங்களும் | நிலமும் கட்டட மும் | மொத்தம் ஏனைய உட்பட | | |
| 1956 .. .. | 22·0 | 9·2 | 8·2 | 18.5 | 0·36 | வி.கி. |
| 1957 .. .. | 22·0 | 8·5 | 8·1 | 18·0 | 1·42 | வி.கி. |
| 1958 .. .. | 22·0 | 8·2 | 8·0 | 17·2 | 1·25 | 404 |
| 1959 .. .. | 22·0 | 7·8 | 7·9 | 16·5 | 4·19 | 472 |
| 1960 .. .. | 22·0 | 7·7 | 8·1 | 15·9 | 4·56 | 522 |
| 1961 .. .. | 26·1 | 7·3 | 8·2 | 15·6 | 4·53 | 567 |
| 1962 .. .. | 29·0 | வி.கி. | வி.கி. | வி.கி. | 4·69 | 614 |

(அ) நிதித்தரவுகள் கணக்கு வருடங்களுக்கு, அதாவது சித்திரை-பங்குனி வருடத்திற்குரியன. ஊழியத்தரவுகள் தை-மார்கழி கலண்டர் வருடத்திற்குரியன.

**பீங்கான் கூட்டுத்தாபனம்**

இத்தாபனத்தின் பீங்கான் உற்பத்தியானது 1962ம் ஆண்டிற்கு முந்திய மூவருடகாலப் பகுதிக்குரிய சராசரி வருட உற்பத்தியான 445 தொன் களிலிருந்து 1962ல் 687 தொன்களாக அதிகரித்தது. இவ்வுற்பத்தி அதிகரிப் பானது, 1961ல் இக்கூட்டுத்தாபனத்தினுல் ஆரம்பிக்கப்பட்ட விஸ்தரிப்புத் திட்டத்தின் அடிப்படையில், 1962ம் ஆண்டில் தாபனத்தின் நிலையான முதல் ரூ. 27 லட்சத்தினுல் உயர்ந்ததன் விளைவாக ஏற்பட்டதொன்ருகும். இவ் வருடத்தில் 840 தொன்கள் மொத்த உற்பத்தி ஆற்றல் கொண்ட இரு புது ஆலைகள் நிறுவப்பட்டன.

பீங்கான் கூட்டுத்தாபனத்தின் அபிவிருத்தித்திட்டமானது ஏற்கெனவே நிறுவப்பட்டு, 1963ல் உற்பத்தியிலிறங்குமென எதிர்பார்க்கப்படும் ஒரு ''கெயோலின்'' சுத்திகரிப்பு ஆலையை உள்ளடக்குகின்றது. இச்சுத்திகரிப் பாலையானது கூட்டுத்தாபனத்திற்கு கெயோலினைப் போதியளவிலும், தடைப்படாமலும் நிரம்பல் செய்யும். தற்போது முற்ருக இறக்குமதி செய்யப்படும் இக் கெயோலினின் நிரம்பலானது கூட்டுத்தாபனத்தால் உபயோகிக்கப்படும் மூலப்பொருளின் மூன்றிலொரு பங்கைக் கொண்டது. இவ் ஆலைத்திட்டத்திலிருந்து பெறக்கூடிய கணக்கிடப்பட்ட கெயோ லின் உற்பத்தி, தற்போதைய பீங்கான் தொழிற்சாலையின் தேவைக்கதிக மாக அமைகின்றது. இதுவே கணக்கிடப்பட்ட உற்பத்தி விளைவான 1600 தொன் பீங்கானையும், 300 தொன் சுவர்ச் சாயங்களையும் 5000 தொன் சுகாதார தளபாடங்களையும் கொண்ட, இரண்டாவது பீங்கான் தொழிற் சாலையின் இயக்கத்திற்கு அடிப்படையாக அமைவதாகும். இப்புதுத் தொழிற் சாலை 1964ம் ஆண்டு ஆரம்பத்தில் உற்பத்தியை ஆரம்பிக்க இருக்கின்றது.

### பீங்கான் கூட்டுத்தாபனம் (அ)

| வருடம் | அங்கீகரிக் கப்பட்ட முதல் (10 லட்சம் ரூபாய் களில்) | நிலையான முதல் (10 லட்சம் ரூபாய்களில்) | | | பீங்கான் பொருள் உற்பத்தி (தொன் கள்) | ஊழியம் |
|---|---|---|---|---|---|---|
| | | இயந்திர மும் உபகர ணங்களும் | நிலமும் கட்டடங் களும் | மொத்தம் ஏனைய உட்பட | | |
| 1957 (ஆ) .. .. | 3·0 | 1·1 | 1·1 | 2·2 | 338 | 147 |
| 1958 (இ) .. .. | 5·2 | 1·0 | 1·1 | 2·1 | 290 | 139 |
| 1959 .. .. | 5·2 | 1·8 | 1·2 | 2·0 | 453 | 132 |
| 1960 .. .. | 5·2 | 0·8 | 1·2 | 2·0 | 466 | 186 |
| 1961 .. .. | 5·2 | 0·8 | 1·2 | 2·0 | 417 | 190 |
| 1962 .. .. | 5·2 | 3·5 | 1·2 | 4·7 | 687 | 235 |

(அ) 1959ம் ஆண்டு தொடக்கம் தரவுகள் நிதிவருடங்களுக்குரியன.
(ஆ) கலண்டர் வருடம் தை-மார்கழி.
(இ) ஆவணி 1, 1958 தொடக்கம்—பங்குனி 31, 1959 மட்டுமுள்ள காலப்பகுதி.

**பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்**

1962ம் ஆண்டில் இக்கூட்டுத்தாபனத்தின் எரிசோடா, குளோறின் தயாரிப்பு பெருமளவில் அதிகரித்து, கிட்டத்தட்ட முறையே 915 தொன் களும் 217 தொன்களுமாக உயர்ந்துள்ளது. (1961ல் இதற்குரிய ஒப்பியல் பான தொகைகள் 666 தொன்களும் 183 தொன்களுமாகும்). கடந்த சில வருடங்களாக இக்கூட்டுத்தாபனத்தின் நிலையான முதல் ஒரு நிரந்தர நிலை யிலிருந்ததெனினும் அத்தோடு சேர்ந்து 1962ம் ஆண்டில் மொத்த ஊழியத் தொகையில் சிறு வீழ்ச்சி ஏற்பட்டிருப்பினும் இவ்வாண்டில் ஏற்பட்ட உற்பத்தி உயர்வு, ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்ட உற்பத்தி ஆற்றல் கூடியளவில் உப யோகப்படுத்தப்பட்டிருக்கின்றதென்பதை தெளிவாகக் காட்டுகின்றது. குளோரினது உற்பத்தி நாட்டினது தற்போதைய தேவைகளுக்கதிகமாக இருந்த விடத்து மிகுதியான பாகம் தன்மை மாற்றப்பட்டது. எரிசோடாவின் கூடிய உற்பத்தி, இறக்குமதிச் சேமிப்பு விளைவை உண்டாக்கியது. கூட்டுத் தாபனத்தின் எரிசோடா உற்பத்தி 1961ம் ஆண்டின் நாட்டினது தேவை களில் 23 சதவீதமாக அமைந்திருக்க 1962ல் அது 40% சதவீதமாக உயர்ந் துள்ளது. 1963ல் தனது இயக்கத்திறனில் தொடர்ந்த திருத்தத்தையும் அதன் விளைவாக உற்பத்திச் செலவுகளில் மேலும் வீழ்ச்சியையும் கூட்டுத் தாபனமானது எதிர்பார்த்து இயங்குகின்றது. ஏற்கனவே அமையப்பெற் றிருக்கும் உற்பத்தித்திறன் உபயோகத்தை விஸ்தரிக்க மேலும் முதலீடாக ரூ. 800,000 செலவு செய்யப்படும். இம்மூலதனமே ''சென்ட்ரிவூகல்'' பம்புகளின் நிறுவலுக்கும், தொழிற்சாலையின் இயக்கம் தடைபடுவதைக் குறைப்பதற்கு ஒரு மேலதிக ''கொன்வேற்றர்''க்கும், காய்ந்து போன உப்பினை சந்தை விற்பனைக்குத் தயார் செய்யும் வண்ணம் ''உருள் காய்ச்சி'' ஒன்றினுக்கும் வேண்டிய நிதியை அளிக்கின்றது.

### பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்

| வருடம் | அங்கீகரிக் கப்பட்ட முதல் (10 லட்சம் ரூபாய் களில்) | நிலையான முதல் (10 லட்சம் ரூபாய்களில்) | | | ஊழியம் | உற்பத்தி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | இயந்திர மும் உப கரணங் களும் | நிலமும் கட்டட மும் | மொத் தம் ஏனைய உட்பட | | எரி சோடா (தொன்) | குளோ றின் (தொன்) |
| 1956 .. .. .. | 15·7 | 8·3 | 2·6 | 11·5 | வி.கி. | — | — |
| 1957 .. .. .. | 15·7 | 5·8 | 3·2 | 9·5 | வி.கி. | — | — |
| 1958 .. .. .. | 15·7 | 6·0 | 3·4 | 10·0 | 174 | 25 | 2 |
| 1959 .. .. .. | 15·7 | 6·0 | 3·4 | 10·1 | வி.கி. | — | — |
| 1960 .. .. .. | 15·7 | 6·3 | 3·5 | 10·5 | 223 | 64 | 70 |
| 1961 .. .. .. | 15·7 | 6·3 | 3·5 | 10·5 | 222 | 666 | 183 |
| 1962 .. .. .. | 15·7 | 6·3 | 3·5 | 10·5 | 210 | 915 | 217 |

### இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம்

ஓரளவில் இலங்கையின் சிமெந்து நுகர்வின் போக்கு முன்னர் மதிப்பிட்டதற்கெதிராய் குறைவாய் அமைந்த காரணத்தினுல், ஒரு மாற்றியமைக்கப்பட்ட காலத்திட்டத்தைக் கொண்ட, சிமெந்து தொழிலின் விஸ்தரிப்புத்திட்டம், நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றது. உற்பத்தி 1962ல் இருந்த வருடம் 85 ஆயிரம் தொன் எனும் நிலையிலிருந்து 1966ல் 450 ஆயிரம் தொன்னுக உயரும் எனக் கணக்கிடப்பட்டிருக்கின்றது, இவ்வுற்பத்தி இலக்குகளை அடைவதென்பது, காங்கேசன் சிமெந்துச்சாலையின் விஸ்தரிப்பிலும், காலியில் சிமெந்துக்கட்டி அரைக்கும் ஆலை நிறுவுவதிலும். புத்தளத்தில் வேருெரு சிமெந்து தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதிலும் தங்கியிருப்பதொன்ருகும். பல சிமெந்துப் பொருட்களின் உற்பத்தியும் மேற்கொள்ளப்பட இருக்கின்றது. இவை தொலைபேசிக் குடில்கள், தொலைபேசிக் கம்பங்கள், கேபிள் அமைப்பிற்கு வேண்டிய சிமெந்துப் பொருட்கள் போன்றனவாம்.

காங்கேசன்துறையிலிருந்து நிரம்பல் செய்யப்படும் சிமெந்துக்கட்டிகளை அரைக்கும் இயக்கத்தைக் கொண்ட ஆலையானது, உற்பத்தி செய்யப்பட்ட சிமெந்தினது ஏற்றல் செலவைக் குறைப்பதாக அமையும். புத்தளத்திலே நிறுவப்பட இருக்கும் 200 ஆயிரம் தொன் உற்பத்தி செய்யக்கூடிய இரண்டாவது சிமெந்து தொழிற்சாலையானது சிமெந்துற்பத்தி விரிவாக்கத் திட்டத்தின் முக்கிய வேலையாக அமைவது மட்டுமின்றி மொத்த மதிப்பீட்டு மூலதனத்தின் பெரும் பங்குக்கும் காரணமாகின்றது. இப்புதிய தொழிற்சாலை நிறுவப்பட இருக்கும் இடமானது ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருக்கிறது. காங்கேசன்துறையில் இருக்கும் தொழிற்சாலையின் விஸ்தரிப்புத்திட்டத்தின் கட்டட வேலைகள் ஏற்கனவே தொடங்கியுள்ளன. காலியில் சிமெந்துக்கட்டி அரைக்கும் ஆலையின் கட்டட நிறுவனம், இயந்திர இயக்கம் ஆனவை 1964-ம் ஆண்டின் முதற்காலில் முடிவாக்கப்பட இருக்கின்றன.

இவ்விதமாக கணக்கிடப்பட்டிருக்கும் மூலதனமும், உற்பத்தியும், மூன்று தொழிற்சாலைகளின் நிர்மாணிப்புடன் நாட்டின் முழுமையையும் வியாபிக்கும் ஒரு சிமெந்து, சிமெந்து பொருட்களின் பங்கீட்டு முறையும், ஏற்கனவே அமைந்திருக்கும் நிர்வாக இயக்க முறைகளின்மேல், புதிய பொறுப்புகளை சுமத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே சமீபத்தில் கூட்டுத்

தாபனத்தின் நிர்வாக அமைப்பு, கணக்குமுறை, நிர்வாக முறைகள் பற்றி நடாத்தப்பட்ட பரிசீலனையின் அடிப்படையில் ஓர் சீர்திருத்தம் ஒன்று திட்டமிடப்பட்டிருக்கின்றது.

**இலங்கைச் சிமெந்து கூட்டுத்தாபனம்**

| வருடம் (அ) | அங்கீகரிக் கப்பட்ட முதல் (10 லட்சம் ரூபாய் களில்) | நிலையான முதல் (ஆ) (10 லட்சம் ரூபாய்களில்) | | | ஊழியம் | சிமெந்து உற்பத்தி (தொன்) |
|---|---|---|---|---|---|---|
| | | இயந்திர மும் உபகர ணங்களும் | நிலமும் கட்டடமும் | மொத்தம் ஏனைய உட்பட | | |
| 1956 .. | 26·8 | 7·01 | 7·39 | 14·62 | வி.கி. | 83·4 |
| 1957 .. | 26·8 | 6·02 | 6·16 | 12·40 | வி.கி. | 48·2 |
| 1958 .. | 26·8 | 5·40 | 6·52 | 12·11 | வி.கி. | 79·1 |
| 1959 .. (தை-பங்குனி) | 26·8 | 5·21 | 6·64 | 12·03 | வி.கி. | 23·0 |
| 1959/60 .. | 64·8 | 5·25 | 5·98 | 11·48 | வி.கி. | 91·9 |
| 1960/61 .. | 64·8 | 4·68 | 5·27 | 10·27 | 972 | 80·5 |
| 1961/62 .. | 64·8 | 2·93 | 4·72 | 8·13 | 987 | 85·7 |

(அ) 1956, 1957, 1958 கலண்டர் வருடங்கள். 1959-60 தொடக்கமாக நிதிவருடங்கள் (சித்திரை-பங்குனி).
(ஆ) ஒவ்வொரு கணக்கு வருட முடிவிலும் பெறுமதிக்கழிவின் பின் நிகரத்தொகை.

**கந்தளாய்ச் சீனி உற்பத்திக் கூட்டுத்தாபனம்**

1962ல் கந்தளாய்ச் சீனித்தொழிற்சாலையில் உற்பத்தி 1044 தொன்களாக விளங்கிற்று. இது கிட்டத்தட்ட நாட்டினது 1962ன் மொத்தத் தேவையின் அரைச்சதவீதமாக அமைந்தது. (கல்ஓயா அபிவிருத்தி சபையின் 1961-62ம் ஆண்டு மொத்தச்சீனி உற்பத்தி 2541 தொன்கள் ஆகும்). இத்தாபனத்தின் 1962ன் சீனி உற்பத்தி இவ்வருடத்தின் முந்திய இருவருட உற்பத்திகளிலும் உயர்வாக இருப்பினும், தொழிற்சாலை அதன் தற்போதைய உற்பத்தி ஆற்றலிலும் குறைவாகவே உற்பத்தி செய்கின்றதெனலாம். அதன் உற்பத்தி ஆற்றல் 14 ஆயிரம் தொன்களென கணக்கிடப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலையின் இயக்கத்திற்கு முக்கிய அடிப்படைத் தடையாக அமைந்து சிக்கனமற்ற உற்பத்திச் செலவுகளை விளைவிப்பது, கரும்பின் நிரம்பற் தட்டுப்பாடேயெனலாம். இது போதிய ஊழியம், முக்கியமாகக் கரும்பு அறுவடைக்கு கிடைக்காதமையினாலும், மேலும் சில இயற்கைத்தடைகளினாலுமே ஏற்படுகின்றது. இவ்விரண்டில் முன்னையது ஊழியத்தேவைகளில் பருவத் தளம்பல்களாலும், அவை நெல் விளைவுச் சுழல் போன்றதன் தன்மையுடையதாலும் ஏற்படுவது. பின்னது போதிய நீர்ப்பாசன வசதியின்மையையும், விளைந்த பயிருக்கு யானைகளினால் ஏற்படும் அழிவையும் குறிப்பது. முன்னைய பிரச்சனைக்கு தீர்வுகாணுமுகமாக கூட்டுத்தாபனம், அறுவடையை ஒரு அளவிலாவது இயந்திரமயமாக்கவேண்டிய தேவையை உணர்ந்துள்ளது. இவ் ஊழியத்தட்டுப்பாடானது விளைச்சல் பரப்பின் விஸ்தீரணத்தை குறைப்பதுமன்றி, சில கலாச்சார இயக்கங்களிலே கவனத்தைக் குறைத்தும் அதன் விளைவாக தொடர்ந்து நிகழும் ஒப்பியல்பான குறை விளைச்சலுக்கு இடமளிக்கின்றது. கரும்பிலிருந்து, உற்பத்திச் சீனி பெறப்படும் வீதமானது ஆரம்பத்திலிருந்த, 4 சதவீதத்திலிருந்து 1961ல் 8.6 சதவீதமாக உயர்ந்துள்ளது. கந்தளாயில் நடாத்தப்பட்ட கரும்புப்பரிசோதனைகள் இப்பெறப்படு விகிதத்தை 10 சதவிகிதத்திற்கு உயர்த்த முடியுமென்பதை காட்டியிருக்கின்றன.

சீனி உற்பத்தியின் உபபொருளான கரும்புச்சக்கையைக் கொண்டு மதுபான உற்பத்தி செய்யும் தொழிற்சாலையும் முடிவடையும் தறுவாயிலிருக்கின்றது. மதுபான வடிகட்டி ஆலையும் இந்த வருடத்தில் உற்பத்தியை ஆரம்பிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. மதுபான தொழிற்சாலையின் இயக்கமும், வடிகட்டி ஆலையும், கூட்டுத்தாபனத்தின் பொது உற்பத்திச் செலவுகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக் கொண்டுவரத்தக்கன. இவ்விரண்டும் தம் முழு உற்பத்தியைச் செய்யும் போது ஊழியர்களினது வீடமைப்பில் மேலும் முதலீடு செய்யப்படவிருக்கின்றது.

### கந்தளாய்ச் சீனிக் கூட்டுத்தாபனம்

| வருடம் (அ) | அரசாங்கத்தால் அளிக்கப்பட்ட முதல் (10 லட்சம் ரூபாய்களில்) | நிலையான முதல் (பத்துலட்சம் ரூபாய்களில்) | | | ஊழியம் | சீனி உற்பத்தி (தொன்கள்) |
|---|---|---|---|---|---|---|
| | | இயந்திரமும் உபகரணங்களும் | நிலமும் கட்டடமும் | மொத்தம் ஏனைய உட்பட | | |
| 1958 .. .. | 10·0 | — | 0·04 | 0·06 | வி.கி. | — |
| 1959 .. .. | 14·7 | 6·1 | 0·80 | 7·4 | வி.கி. | — |
| 1960 .. .. | 18·5 | 11·7 | 1·85 | 14·9 | வி.கி. | 274 |
| 1961 .. .. | 23·3 | 12·7 | 7·40 | 21·9 | 360 | 307 |
| 1962 .. .. | 28·9 | வி.கி. | வி.கி. | வி.கி. | — | 1,044 |

(அ) கடைசி வரிசையில் தரப்பட்டிருக்கும் புள்ளிவிபரங்களைத் தவிர்த்து ஏனையயாவும் சித்திரை-பங்குனி, நிதிவருடங்களுக்குரியன. சீனி உற்பத்திக்குரிய ''புள்ளிவிபரம்'' கலண்டர் வருடத்திற்குரியது.

### ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனம்

இக்கூட்டுத்தாபனத்தின் ஆரம்பத்திலிருந்து ஒரு சிறு வீழ்ச்சி ஏற்பட்ட 1958ம் ஆண்டொன்றைத்தவிர, ஒட்டுப்பலகை, ஒட்டுப்பலகைப் பொருட்கள் (தேயிலைப் பெட்டிகள்) இவற்றினது உற்பத்தி, சிறிது சிறிதாக உயர்ந்து வந்திருக்கின்றது. 1962ம் ஆண்டில் ஒட்டுப்பலகை, ஒட்டுப்பலகைப் பொருட்கள் (தேயிலைப் பெட்டி) போன்றவற்றின் உற்பத்தியில் குறிப்பிடத்தக்களவு உயர்வு ஏற்பட்டது. இவ்வொவ்வொன்றினதும் உற்பத்தி கிட்டத்தட்ட முறையே 125 லட்சம் சதுர அடி, 702,400 ஆல் உயர்ந்தது. (1961ம் ஆண்டில் இவ்வுற்பத்தியில் ஏற்பட்ட ஒப்பியல்பான மாற்றம் முறையே 98 லட்சம் சதுர அடி, 458,100 ஆக அமைந்தது). 1962ம் ஆண்டிலே கூட்டுத்தாபனத்தின் நிலையானமுதலிலும், அதன் ஊழியத் தொகையினளவிலும் ஒப்பியல்பாக ஏற்பட்ட சிறுமாற்றமும், அதனோடு சேர்ந்த இவ்வருடத்து குறிப்பிடத்தக்களவு உற்பத்தி உயர்வும், உற்பத்தித்திறனின் திருந்திய உபயோகத்தைக் குறிப்பதாக அமைந்துள்ளது.

## ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனம்

| வருடம் | அங்கீகரிக்கப்பட்ட முதல் (10 லட்சம் ரூபாய் களில்) | நிலையான முதல் (10 இலட்சம் ரூபாய்களில்) | | | ஊழியம் | உற்பத்தி | | இலாபம் வரி செலுத்த முன்பு (10 லட்சம் ரூபாய் களில்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | இயந்திரமும் உபகரணங்களும் | நிலமும் கட்டடமும் | மொத்தம் | | ஒட்டுப் பலகை (இ) (10 லட்சம் சதுர அடி) | தேயிலை (அ) மரப் பெட்டிகள் (ஆயிரம்) | |
| 1956 (ஆ) .. .. | 2·8 | 0·7 | 0·8 | 1·5 | 351 | 5·6 | 367·2 | 0·4 |
| 1957 .. .. | 2·8 | 0·6 | 0·8 | 1·4 | 354 | 7·6 | 353·0 | 0·4 |
| 1958 .. .. | 2·8 | 0·6 | 0·7 | 1·3 | 356 | 6·9 | 330·7 | –0·5 |
| 1959 .. .. | 2·8 | 0·8 | 0·8 | 1·6 | 389 | 8·3 | 412·3 | 0·7 |
| 1960 .. .. | 2·8 | வி.கி. | வி.கி. | வி.கி. | வி.கி. | 9·3 | 434·3 | 0·4 |
| 1961 .. .. | 2·8 | 0·8 | 1·3 | 2·1 | வி.கி. | 9·8 | 458·1 | வி.கி. |
| 1962 .. .. | 2·8 | 1·4 | 1·3 | 2·7 | 594 | 12·5 | 702·4 | வி.கி. |

(அ) உபகரணங்களோடும் உட்கரையோடும் கூடிய முழுப்பெட்டிகள், அவையல்லாத அரைப் பெட்டிகள் இரண்டும்.

(ஆ) 1956 சித்திரை 1ம் திகதி தொடங்கி 9 மாதங்களுக்கு.

(இ) மூவொட்டு ஒட்டுப்பலகையின் அடிப்படையில்.

### புதிய தொழிற் திட்டங்கள்

அரசாங்கத்துறைக்குரிய பல புதிய தொழிற் திட்டங்களின் உருவாக்கம் பலதரப்பட்ட நிலைகளில் இருக்கின்றன. நைட்ரேஜின் உர உற்பத்தி, நில எரி எண்ணெய் சுத்திகரிப்பாலை, விவசாய உபகரணங்களினுற்பத்திக்கான பாரப்பொருள் திட்டம், கோதுமை மா ஆலை, சிலிக்கேற் கல், கெலாட்டின், பிசின் போன்றவற்றின் உற்பத்தி முதலானவற்றின் நிறுவனம் பற்றிய நடைமுறை வசதி அறிக்கைகள் அரசாங்கத்தினுல் கிடைக்கப் பெற்றுள்ளன. உர உற்பத்திச் சாலைக்கு வேண்டிய மின்சார வசதிகளோடு தொடர்பான தொழில்முறை, பொருளாதார நன்மைகள், நிலஎரி எண்ணெய்ச் சுத்திகரிப்பாலை அமைப்புத் திட்டத்தினையும், உர உற்பத்திச்சாலை அமைப்பினையும் இணைக்கப்பட்ட ஒரு முறையிலேயே தயாரிக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளன. சுத்திகரிப்பாலைக்குரிய விபரக் குறிப்புக்கள் யாவும் முடிவாக்கப்படும் நிலையை அடைந்திருக்கின்றன. பாரப்பொருட்கள் உற்பத்திக்குரிய கட்டடவேலை இவ்வருடத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. ஏக்கலையில் இருக்கும் தொழில் நிலையத்திற்கண்மையில் தற்காலிகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு இடத்தில், சிலிகேற்கற்களுக்கு வேண்டிய சுண்ணும்புச் செறிவு பற்றிய விசாரணைகள் நடைபெறுகின்றன.

### இலங்கை ரயர் கூட்டுத்தாபனம்

1962ம் ஆண்டு தைமாதம் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை ரயர் கூட்டுத்தாபனமானது சித்திரை 1965ல் வர்த்தக உற்பத்தியை ஆரம்பிக்க இருக்கிறது. இத்தொழிற்சாலை நிர்மாணிப்பின் இயந்திரப் பொறியியல் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. 1961ல் ஆரம்பித்துத் தொடர்ந்து இரண்டு வருடங்களுக்கு ரூ. 185 இலட்சம் கொண்ட மொத்தத் தொகை அரசாங்கத்தினுல் இதற்கென வாக்களிக்கப்பட்டிருக்கின்றது. இவ்விரு வருடங்களுக்குரிய வெளிநாட்டுச் செலவுகளுக்குரிய ரூ. 87.5 இலட்சம் கொண்ட தொகை இலங்கைக்கும் ரஷ்யாவிற்கும் இடையே வரையப்பட்ட பொருளாதாரத் தொழில் முறைக் கூட்டுறவு ஒப்பந்தத்தின் கீழ் நிறுவப்பட்ட சோவியத் கடனிலிருந்து வழங்கப்பட்டிருக்கிறது.

**இலங்கை எஃகுக் கூட்டுத்தாபனம்**

எஃகுக் கூட்டுத்தாபனம் நிறுவ எண்ணியிருக்கும் தொழிற்சாலை யானது ரூ. 800 லட்சம் மதிப்பீட்டுச் செலவிலும், வருடம் 35,000 தொன் சுருள் எஃகு, கம்பிப் பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய திறனுள்ள தாகவும் அமையும். இத்தொழிற்சாலை இலங்கைக்கும் ரஷ்யாவிற்குமிடையே வரையப்பட்ட உடன்படிக்கையின் கீழ் ஏற்படுத்திய ஒப்பந்தத்தின் அடிப் படையில் நிறுவப்படும். இத்தொழிற்சாலை 1965ல் உற்பத்தி ஆரம்பிக்கு மெனவும், 400 ஊழியர்களுக்கு வேலையளிக்குமெனவும் எதிர்பார்க்கப்படு கிறது.

**தனியார்துறை**

தனியார்துறை தொழிலுற்பத்தி பற்றிய விரிவான தரவுகள் கிடைக்கப் பெருமையினுல், அட்டவணை II (1)-1இலும் II (1)-3இலும் தரப்பட்டி ருக்கும் விபரங்கள் முதலீட்டு அமைப்பு, ஊழியம், அரசாங்கத்தினுல் 1961-62 காலப் பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட புதிய தொழிற்திட்டங்களின் இயந்திரச் செலவு (எதிர்கால மூலதனக்காரர் விளக்கியபடி) முதலிய போன்றவற்றை ஒட்டியே தரப்பட்டிருக்கின்றன. இப்புதிய தொழிற் திட்டங்கள் சர்வ தேசத்தரமான தொழிற் பிரிவினை ஒட்டியே, முக்கிய தொழிற்கிளைகளின் அடிப்படையில் வேருக்கப்பட்டிருக்கின்றன. இத்தொழிற் களிக்கப்பட்ட ஊக்குதவி, முதல் 5 வருடங்களில் இம்முயற்சிகளின் உபயோ கத்திற்கான இறக்குமதி செய்யப்பட்ட முதல் உபகரணங்கள் மேலும், சில்ல றைகள் ஈடுசெய் பொருட்கள் மேலும், அளிக்கப்பட்ட வரிச் சலுகைகளை உள்ளடக்குவதாம். அட்டவணை II (1)-1 (தொழிலமைச்சின் அபிவிருத்திப் பகுதியின் அங்கீகாரம் பெற்று, ரூ. 2 லட்சம் அன்றிக்கூடுதலான மதிப்பு முதலைக் கொண்டதான) இடைத்திட்ட, பெருந்திட்ட தொழிற்கள் சம்பந் தப்பட்டதாகும். அட்டவணை II (1)-3, கிராமிய அபிவிருத்திச் சிறு தொழில் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்று, ரூ. 2 லட்சத்தினும் குறை வான முதலைப் பெற்ற சிறு திட்டதொழிற்கள் சம்பந்தப்பட்டதாகும்.

அங்கீகாரம் பெற்ற தொழில்களுக்கான உதவித்திட்டமானது, 1961 வைகாசியில் ஆரம்பிக்கப்பட்டது. இத்திகதியைத் தொடர்ந்து 18 மாத காலப்பகுதியில் 396 (அ) எண்ணிக்கை கொண்ட பலதரப்பட்ட தொழில் களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. இவற்றுள் மூன்றிலொன்று இடை, பெருந்திட்ட தொழிற்களாயும் இவற்றில் அரைப்பங்கிற்குமேல் 1961ம் ஆண்டின் கடைப்பாகத்திலே அங்கீகாரம் பெற்றனவாயும் இருக்கின்றன. ஒவ்வொரு அரைவருடகாலப்பகுதிக்கும் அங்கீகரிக்கப்பட்ட இடை, பெருந் திட்ட தொழிற்களின் எண்ணிக்கை குறைய முற்பட்டாலும், 1961ம் ஆண்டின் பின் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்திட்டங்களின் அளவு கூடியுள்ளது. 1961 ஆடி—மார்கழிப் பகுதிக்குள் உள்ளடங்கும் மூன்று அரை வருடகாலப்பகுதி கள் ஒவ்வொன்றிலும் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்திட்டங்களின் தலைத் தொழில் முதலீடு முறையே, ரூ. 549,000 ரூ. 716,000 ரூ. 951,000 ஆக

---

அ. இவற்றுள் ஒன்பது இடை, பெருந்திட்ட முயற்சிகளாக, ஏற்கனவே இயங்கிவந்து புதுப் பொருட்களின் உற்பத்திக்கென அங்கீகாரம் பெற்றவை. அங்கீகாரம் அளிக்கப்பட்ட புதுப்பொருட்களுடன், அவற்றிற்குரியனவான முதலினதும், ஊழியத்தினதும் பாகத்தை இணைப்பதன் கஷ்டத்தால் இத்தொழில்கள் அட்டவணை II (1)-1இல் புகுத்தப்படவில்லை,

விளங்குகிறது. இவ்வித தரவுகள் கிடைக்கப்பெறும் குறுகிய காலப்பகுதியின் அனுபவத்தின் அடிப்படையில் ஏற்பட்ட இத்தொடர் நிகழ்ச்சி, பொதுவில் தனியார் தொழில் முயற்சி, (ஒப்பியல்பான பெருந் தொழிற்களை பிற்காலத்திற்கென ஒத்திவைத்து, ஆரம்பத்தில் சிறு முதலீட்டைக் கொண்ட திட்டங்களில் ஈடுபடும் போக்கை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

மேற்காட்டப்பட்ட அட்டவணைகளில் ஆராயப்பட்ட இடை, பெருந் திட்ட தொழிற்களின் மொத்த மூலதனத்தின் மதிப்பீடு ரூ. 790 லட்சமாகும். இத்தொகையின் 90 சதவீதம் இலங்கையரது முதலைக் கொண்டதெனவும் கூறப்பட்டுள்ளது. இப்பகுதியிற் சேரும், இவ்விதம் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்களில் கிட்டத்தட்ட அரைப்பாகம் 4 தொழிற்கிளைகளுக்குள் அதாவது புடவை (கரைக்கயிறு நூற்கயிறு நூல் உட்பட) உலோகப்பொருட்கள் சில்லறை ரசாயனப்பொருட்கள், (உரம் உட்பட), மின்சாரப் பரிகரணங்களும், தளபாடங்களும், என்பனவற்றுள் அடங்குவனவாகும். உணவு குடிவகை கிளைக்குள் அடங்கும் இடைப்பெருந் திட்டத் தொழிற்கள் (ISIC எண் 201-03, 207-09ம் 213ம்) ஒப்பியல்பான விதத்தில் குறைந்த முதல் ஊழிய விகிதத்தைக் கொண்டிருக்க, உலோகப்பொருளில்லாத பொருட்களை (கண்ணாடி, களிமண் உட்பட) (ISIC எண் 331-32ம் 399ம்) தயாரிக்க அங்கீகரிக்கப்பட்ட தொழிற்கள், தலா தொழிலுக்கு உயர்ந்த முதல் விகிதத்தையும் குறைந்த ஊழிய விகிதத்தையும் கொண்டிருக்கின்றன. வேலை நிலையில் ஏற்பட்ட உயர்வு மறுபுறத்தில், முக்கியமாக தமது ஒப்பியல்பான, உயர்ந்த முதல் ஊழிய விகிதத்தைக் கொண்ட ஆடை உற்பத்தித் தொழிற் பகுதிக்குள்ளேயே ஏற்பட்டுள்ளது. வைகாசி 1961ஐத் தொடர்ந்த 18 மாதங்களில் 272 சிறு திட்டத்தொழில்கள் அங்கீகாரம் பெற்றுள்ளன. அட்டவணை II (1)—4ல் காட்டியுள்ளபடி அவற்றுள் ஐந்தில் மூன்று பங்கு அல்லது 160 தொழில்கள் ஐந்து தொழிற்கிளைகள் சம்பந்தப்பட்டனவாகும். அவையாவன, புடவை, ஆடையணி (ஆடை பாதரட்சைகளைவிட) உரம் உட்பட்ட ரசாயனப் பொருட்கள், உலோகப்பொருட்கள், உணவு குடிவகை புகையிலை, என்பன.

1963ம் ஆண்டிற்கு முன்னராக அங்கீகரிக்கப்பட்ட சிறு திட்ட முயற்சிகளின் கணக்கிடப்பட்ட மொத்த முதலீடு ரூ. 180 லட்சம் அல்லது தொழிற்குத் தலா ரூ. 7000 ஆக இருந்தது. இடை, பெருந்திட்ட தொழிற் துறையின், தலா தொழில் முதல் கிட்டத்தட்ட ரூ. 700,000 ஆக விளங்கிற்று. சிறு திட்ட கைத்தொழில்களின் தலா தொழிலாளிக்குரிய முதல் ரூ. 2700ஆகவும் இடை, பெருந்திட்ட தொழில்கள் ரூ. 8400ஆகவும் இருப்பதால் இச்சிறு திட்டத்தொழிற்களின் ஒப்பியல்பான ஊழிய அடக்கத்தன்மை வெளிப்படுகின்றது.

சிறு தொழில்களில் அரைப்பங்குக்கு மேலானவை அல்லது 144, தை-ஆனி 1962க்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்த ஆறு மாத காலத்திலே இத்தொகையில் கூர்மையான வீழ்ச்சி ஏற்பட்டது. 1963க்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்ட 272 சிறுதிட்ட தொழிற்களில் கிட்டத்தட்ட 107 தற்போது வர்த்தக உற்பத்தியை மேற்கொண்டிருக்கின்றன. (ஆ)

---

ஆ. இது 1963 மாசியில் தபால் மூலம் நடத்தப்பட்ட ஒரு விபரச்சேகரிப்பின் அடிப்படையில் உண்டானது. எஞ்சிய அங்கீகாரம் பெற்ற சிறு தொழிற்கள் அபிவிருத்தி பற்றிய விபரம் கிடைத்தில, ஒன்றில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு முற்றுகப் பதிலளிக்கப்படாமலோ அன்றிப் பதில்கள் கிடைக்காமலோ இருந்தன.

## அட்டவணை II (1)-1

## வைகாசி 1961-மார்கழி 1962க்குமிடையில் அங்கீகரிக்கப்பட்ட இடை, பெருந் திட்டத் தொழில்களில் மதிப்பீட்டு முதலும், ஊழியமும்

| ஐ.எஸ்.ஐ.சி. I.S.I.C. இலக்கம் | கைத்தொழிலின் கிளை | திட்டங்களின் எண்ணிக்கை | முதலீடு (10 லட்சம் ரூபாய்களில்) | | ஊழியம் எண்ணிக்கை | இயந்திரத்தின் பெறுமானம் (10 லட்சம் ரூபாய்களில்) |
|---|---|---|---|---|---|---|
| | | | உள் நாட்டு | வெளி நாட்டு | | |
| 201ம் 203ம் | பழம், மரக்கறி இறைச்சி இவற்றின் தயாரிப்பும், பழுது போகாமல் பதம் பண்ணுதலும் .. | 4 | 2·05 | — | 123 | 0·40 |
| 202 | பால் பண்ணைப் பொருட்களின் உற்பத்தி—பால் உணவுகள் .. | 1 | 0·26 | 0·25 | 39 | 0·21 |
| 207ம் 208ம் | கொக்கோ, சாக்லெட்டு இனிப்பு வகை கருப்பட்டி உற்பத்தி .. | 7 | 4·50 | — | 722 | 1·69 |
| 209 | ஏனைய சில்லறை உணவுத்தயாரிப்புகளின் உற்பத்தி .. .. | 1 | 0·40 | — | வி.கி. | 0·03 |
| 213 | மதுவடிகளும், "மோல்ட்"கள் உற்பத்தியும் .. .. | 2 | 3·60 | — | 850 | 2·60 |
| 231—33 | புடவை; நூற்கரைக் கயிறு நூற் கயிறு நூல் உட்பட .. .. | 14 | 19·86 | 1·64 | 1,519 | 17·73 |
| 241 | பாதரட்சைகள் உற்பத்தி .. | 3 | 0·61 | — | 175 | 0·36 |
| 243 | உடுத்துவனவின் உற்பத்தி பாதரட்சை தவிர்ந்த .. .. | 3 | 1·33 | — | 154 | 0·29 |
| 271 | "பல்ப்", காகிதம், காகித அட்டை ஆலைகள் .. .. | 4 | 2·35 | — | 135 | 1·13 |
| 272 | "பல்ப்", காகிதம், காகித அட்டைப் பொருட்களின் உற்பத்தி .. .. .. | 2 | 0·40 | — | 32 | 0·25 |
| 300 | ரப்பர் பொருட்களுற்பத்தி .. | 1 | 0·22 | — | 27 | 0·19 |
| 311ம் 319ம் | சில்லறை ரசாயனப் பொருட்களுற்பத்தி .. .. .. | 11 | 2·90 | 2·06 | 387 | 1·89 |
| 331—32ம் 339ம் | உலோகத்தாலல்லாப் பொருட்களின் உற்பத்தி, களிமண், கண்ணாடிப் பொருட்களுட்பட | 3 | 6·45 | 0·60 | 720 | 6·12 |
| 341ம் 350ம் | உலோகப் பொருட்களின் உற்பத்தி | 22 | 8·09 | 0·84 | 1,289 | 4·45 |
| 360 | பொறிகளின் உற்பத்தி மின்சாரப் பொறிகளைத் தவிர்த்து .. | 6 | 4·37 | 1·35 | 1,006 | 4·95 |
| 370 | மின்சாரப் பொறி உபகரணங்கள், பாவிப்புகளும் நிரம்பல்களும் .. | 11 | 7·49 | 1·43 | 564 | 3·05 |
| 383 | மோட்டார் வாகனங்களின் உருவாக்கம் .. .. .. | 1 | 0·15 | — | 5 | 0·15 |
| 393ம் 399ம் | மேலே குறிக்கப்படாத உற்பத்தித் தொழில்கள் .. .. | 19 | 5·08 | 0·22 | 660 | 2·93 |
| | மொத்தம் .. | 115 | 70·11 | 8·39 | 8,407 | 48·42 |

மூலம்: தொழிலமைச்சுக்கு "அங்கீகாரம் பெற்ற திட்டம்" என்ற நிலையைப் பெற அனுப்பப் பட்ட விண்ணப்பப்பத்திரங்களில் கூறப் பட்ட விபரங்களின் அடிப்படையில் தரப் பட்டுள்ளது.

## அட்டவணை II (1)-2

### வைகாசி 1961ம் ஆண்டிற்கும் மார்கழி 1962க்கு மிடையில் அங்கீகாரம் அளிக்கப்பட்ட காலப்பகுதிகளின்படி இடை, பெருந்திட்ட அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழிற்களின் பாகுபாடு

| ஐ.எஸ். ஐ.ஸி. I.S.I.C. இலக்கம் | கைத்தொழிற்கிளை | 1961 | | | | 1962 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | வைகாசி-ஆனி | | ஆடி-மார்கழி | | தை-ஆனி | | ஆடி-மார்கழி | |
| | | திட்டங்களின் எண்ணிக்கை | முதலீடு (10 லட்சம் ரூபாய்களில்) | திட்டங்களின் எண்ணிக்கை | முதலீடு (10 லட்சம் ரூபாய்களில்) | திட்டங்களின் எண்ணிக்கை | முதலீடு (10 லட்சம் ரூபாய்களில்) | திட்டங்களின் எண்ணிக்கை | முதலீடு (10 லட்சம் ரூபாய்களில்) |
| 201ம் 203ம் | பழம், மரக்கறி, இறைச்சி இவற்றின் தயாரிப்பும், பழுது போகாமல் பதம் பண்ணுதலும் .. .. | — | — | 2 | 0·37 | 1 | 0·15 | 1 | 1·53 |
| 202 | பால் பண்ணைப்பொருட்களின் உற்பத்தி—பால் உணவுகள் .. .. .. .. | — | — | — | — | — | — | 1 | 0·51 |
| 207ம் 208ம் | கொக்கோ, சாக்லெட்டு, இனிப்பு வகை, கருப்பட்டி உற்பத்தி .. .. .. .. | — | — | 5 | 4·06 | 2 | 0·44 | — | — |
| 209 | ஏனைய சில்லறை உணவுத்தயாரிப்புகளின் உற்பத்தி | — | — | 1 | 0·40 | — | — | — | — |
| 213 | மதுவடிகளும், ''மோல்ட்'கள் உற்பத்தியும் .. | — | — | 1 | 3·00 | 1 | 0·60 | — | — |
| 231—33 | புடவை; நூற்கரைக்கயிறு நூற்கயிறு நூல் உட்பட | — | — | 4 | 1·68 | 5 | 12·85 | 5 | 6·97 |
| 241 | பாதரட்சைகளின் உற்பத்தி .. .. .. | 1 | 0·06 | — | — | 2 | 0·55 | — | — |
| 243 | உடுத்துவனவின் உற்பத்தி பாதரட்சை தவிர்ந்த .. | — | — | 1 | 0·26 | — | — | 2 | 1·07 |
| 271 | ''பல்ப்'', காகிதம், காகித அட்டை ஆலைகள் .. | — | — | 3 | 1·50 | — | — | 1 | 0·85 |
| 272 | ''பல்ப்'', காகிதம், காகித அட்டை பொருட்களின் உற்பத்தி .. .. .. .. | — | — | 1 | 0·30 | — | — | 1 | 0·10 |
| 300 | ரப்பர் பொருட்களுற்பத்தி .. .. .. | — | — | — | — | — | — | 1 | 0·22 |
| 319 | சில்லறைப் பொருட்களின் உற்பத்தி உரம் உட்பட | — | — | 7 | 3·18 | 3 | 0·88 | 1 | 0·90 |
| 331—332ம் 339ம் | உலோகத்தாலல்லாத பொருட்களின் உற்பத்தி களிமண், கண்ணுடிப் பொருட்கள் உட்பட .. | — | — | 1 | 3·50 | — | — | 2 | 3·55 |
| 341ம் 350ம் | உலோகப் பொருட்களின் உற்பத்தி .. .. | — | — | 10 | 3·38 | 7 | 2·50 | 5 | 3·05 |
| 360 | பொறிகளின் உற்பத்தி மின்சாரப் பொறிகளைத் தவிர்த்து .. .. .. .. | — | — | 4 | 1·72 | 1 | 1·00 | 1 | 3·00 |
| 370 | மின்சாரப்பொறி உபகரணங்கள், பாவிப்புகளும் நிரம்பல்களும் .. .. .. | 1 | 1·00 | 6 | 4·92 | 4 | 3·00 | — | — |
| 383 | மோட்டார் வாகனங்களின் உருவாக்கம் .. | — | — | — | — | 1 | 0·15 | — | — |
| 393ம் 399ம் | மேலே குறிப்பிடாத உற்பத்தித் தொழில்கள் .. | 1 | 0·65 | 8 | 1·35 | 7 | 2·22 | 3 | 1·08 |
| | மொத்தம் .. | 3 | 1·71 | 54 | 29·62 | 34 | 24·34 | 24 | 22·83 |

மூலம்: தொழிலமைச்சிற்கு ''அங்கீகாரம் பெற்ற திட்டம்'' என்ற நிலையைப் பெற அனுப்பப்பட்ட விண்ணப்பப்பத்திரங்களில் கூறப்பட்ட விபரங்களின் அடிப்படையில் தரப்பட்டுள்ளது.

## அட்டவணை II (1)-3

### வைகாசி 1961-மார்கழி 1962க்குமிடையில் அங்கீகரிக்கப்பட்ட சிறு திட்டக் கைத்தொழிற்களின் மதிப்பீட்டு முதலும், ஊழியமும்

| ஐ.எஸ். ஐ.ஸி. இலக்கம் | தொழிற்கிளை | திட்டங்களின் எண்ணிக்கை | முதலீடு (ஆயிரம் ரூபாய்களில்) | ஊழியம் (எண்ணிக்கை) | இயந்திரப் பெறுமானம் (ஆயிரம் ரூபாய்களில்) |
|---|---|---|---|---|---|
| 201ம் 203ம் | பழம், மரக்கறி, இறைச்சி இவற்றின் தயாரிப்பும், பழுது போகாமல் பதம் பண்ணுதலும் .. .. .. | 6 | 283 | 59 | 178 |
| 207ம் 208ம் | கொக்கோ, சாக்கலெட்டு, இனிப்புவகை கருப்பட்டி உற்பத்தி .. .. | 15 | 755 | 434 | 389 |
| 209 | ஏனைய சில்லறை உணவுத் தயாரிப்புகளின் உற்பத்தி .. .. .. .. | 13 | 699 | 403 | 290 |
| 213 | மதுவடிகளும், "மோல்ட்" கள் உற்பத்தியும் | 1 | 112 | 45 | 55 |
| 220 | புகையிலை உற்பத்தி .. .. .. | 3 | 460 | 208 | 345 |
| 231–233 | புடவை; நூற்கரைக் கயிறு, நூற்கயிறு நூல் உட்பட .. .. .. | 32 | 2265 | 842 | 1439 |
| 241 | பாதரட்சைகளின் உற்பத்தி .. .. | 7 | 520 | 133 | 279 |
| 243 | உடுத்துவனவின் உற்பத்தி (பாதரட்சை தவிர்த்து) .. .. .. .. | 17 | 741 | 421 | 499 |
| 260 | மரத்தளபாடங்களும் பொருத்துகளும் .. | 4 | 291 | 69 | 155 |
| 272 | "பல்ப்", காகிதம், காகித அட்டைப் பொருட்களின் உற்பத்தி .. .. | 8 | 417 | 100 | 316 |
| 280 | அச்சடிப்பு, பதிப்பும் தொடர்பான தொழில்களும் .. .. .. | 1 | 90 | 16 | 130 |
| 292 | தோற் பொருட்களின் உற்பத்தி .. | 6 | 274 | 89 | 161 |
| 300 | ரப்பர் பொருட்களுற்பத்தி .. .. | 5 | 504 | 168 | 180 |
| 311ம் 319ம் | சில்லறை ரசாயனப் பொருட்களுற்பத்தி உரம் உட்பட .. .. .. | 47 | 2381 | 999 | 1308 |
| 331–332ம் 339ம் | உலோகத்தாலல்லாப் பொருட்களின் உற்பத்தி—களிமண், கண்ணுடிப் பொருட்களுட்பட .. .. .. | 11 | 760 | 222 | 423 |
| 341ம் 350ம் | உலோகப்பொருட்களின் உற்பத்தி .. | 26 | 2280 | 970 | 1159 |
| 360 | பொறிகளின் உற்பத்தி, மின்சாரப் பொறிகளைத் தவிர்த்து .. .. | 7 | 776 | 324 | 444 |
| 370 | மின்சாரப்பொறி, உபகரணங்கள் பாவிப்புகளும், நிரம்பல்களும்.. .. | 9 | 405 | 104 | 202 |
| 381 | கப்பற்கட்டுத்தொழிலும் பழுது பார்த்தலும் .. .. .. .. | 2 | 227 | 160 | 107 |
| 392-3ம் 399ம் | குறிப்பிடப்படாத உற்பத்தித் தொழிற்கள் .. .. .. .. | 52 | 3308 | 787 | 1766 |
| | மொத்தம் .. | 272 | 17,548 | 6,523 | 9,775 |

மூலம்: தொழிலமைச்சுக்கு "அங்கீகாரம் பெற்ற திட்டம்" என்ற நிலையைப்பெற அனுப்பப்பட்ட விண்ணப்பப் பத்திரங்களின் கூறப்பட்ட விபரங்களின் அடிப்படையில் தரப்பட்டுள்ளது.

## அட்டவணை II (1)-4

### வைகாசி 1961ம் ஆண்டிற்கும் மார்கழி 1962க்குமிடையில் அங்கீகாரம் அளிக்கப்பட்ட காலப்பகுதிகளின்படி அங்கீகரிக்கப்பட்ட சிறு திட்ட கைத்தொழிற்களின் பாகுபாடு

| ஐ.எஸ். ஐ.சி. ISIC இலக்கம் | தொழிற்கிளை | 1961 | | | | 1962 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | வைகாசி-ஆனி | | ஆடி-மார்கழி | | தை-ஆனி | | ஆடி-மார்கழி | |
| | | திட்டங்களின் எண்ணிக்கை | முதலீடு (ஆயிரம் ரூபாய்களில்) | திட்டங்களின் எண்ணிக்கை | முதலீடு (ஆயிரம் ரூபாய்களில்) | திட்டங்களின் எண்ணிக்கை | முதலீடு (ஆயிரம் ரூபாய்களில்) | திட்டங்களின் எண்ணிக்கை | முதலீடு (ஆயிரம் ரூபாய்களில்) |
| 201ம்203ம் | பழம், மரக்கறி, இறைச்சி இவற்றின் தயாரிப்பும் பழுது போகாமல் பதம் பண்ணுதலும் .. | — | — | — | — | 3 | 72 | 3 | 211 |
| 207ம்208ம் | கொக்கோ, சாக்கலெட்டு, இனிப்புவகை கருப்பட்டி உற்பத்தி .. .. .. | — | — | 2 | 110 | 9 | 310 | 4 | 335 |
| 209 | ஏனைய சில்லறை உணவுத் தயாரிப்புகளின் உற்பத்தி .. .. .. | — | — | 3 | 110 | 7 | 219 | 3 | 370 |
| 213 | மதுவடிகளும், ''மோல்ட்'' கள் உற்பத்தியும் .. | — | — | — | — | 1 | 112 | — | — |
| 220 | புகையிலை உற்பத்தி .. .. | — | — | — | — | 2 | 300 | 1 | 160 |
| 231—33 | புடவை; நூற்கரைக்கயிறு நூற்கயிறு, நூல் உட்பட .. .. .. | — | — | 4 | 424 | 24 | 1491 | 4 | 350 |
| 241 | பாதரட்சைகளின் உற்பத்தி .. .. | 1 | 15 | 4 | 215 | 1 | 80 | 1 | 210 |
| 243 | உடுத்துவனவின் உற்பத்தி (பாதரட்சை தவிர்த்து) | — | — | 1 | 6 | 13 | 492 | 3 | 243 |
| 260 | மரத்தளபாடங்களும் பொருத்துகளும் .. | — | — | — | — | 3 | 266 | 1 | 25 |
| 272 | ''பல்ப்'', காகிதம் காகித அட்டைப் பொருட்கள் | — | — | — | — | 5 | 172 | 3 | 245 |
| 280 | அச்சடிப்பும் பதிப்பும் தொடர்பான தொழிற்களும் | — | — | — | — | 1 | 90 | — | — |
| 292 | தோற்பொருட்களின் உற்பத்தி .. .. | | | | | 3 | 61 | 3 | 213 |
| 300 | ரப்பர் பொருட்களுற்பத்தி .. .. | | | | | 4 | 379 | 1 | 125 |
| 311ம்319ம் | சில்லறை ரசாயனப் பொருட்களுற்பத்தி உரம் உட்பட .. .. .. | 1 | 3 | 17 | 694 | 18 | 845 | 11 | 839 |
| 331-32ம் | உலோகத்தாலல்லாப் பொருட்களின் உற்பத்தி | | | | | | | | |
| 339ம் | களிமண் கண்ணாடிப் பொருட்களுட்பட .. | — | — | 2 | 45 | 4 | 400 | 5 | 315 |
| 341ம்350ம் | உலோகப்பொருட்களின் உற்பத்தி .. .. | — | — | 6 | 570 | 9 | 975 | 11 | 735 |
| 360 | பொறிகளின் உற்பத்தி மின்சாரப் பொறிகளைத் தவிர்த்து .. .. .. .. | — | — | — | — | 7 | 776 | — | — |
| 370 | மின்சாரப்பொறி உபகரணங்கள், பாவிப்புகளும் நிரம்பல்களும் .. .. .. | — | — | 1 | 30 | 2 | 113 | 6 | 263 |
| 381 | கப்பற்கட்டுத் தொழிலும் பழுது பார்த்தலும் .. | — | — | — | — | 2 | 227 | — | — |
| 392-3ம் 399ம் | மேலே குறிப்பிடாத உற்பத்தித் தொழில்கள் .. | — | — | 10 | 365 | 26 | 1776 | 16 | 1167 |
| | மொத்தம் .. | 2 | 18 | 50 | 2569 | 144 | 9156 | 76 | 5806 |

மூலம்: தொழிலமைச்சுக்கு ''அங்கீகாரம் பெற்ற திட்டம்'' என்ற நிலையைப்பெற அனுப்பப்பட்ட விண்ணப்பப்பத்திரங்களின் கூறப்பட்ட விபரங்களின் அடிப்படையில் தரப்பட்டுள்ளது.